الدين الحق - تاميلي

# சத்திய மார்க்கம்



جمعية الدعوة بالزلفي

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ ـ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

39

# சத்திய மார்க்கம்

# الدين الحق

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات في الزلفي
Tel: 966 164234466 - Fax: 966 164234477

# الدين الحق

أعده وترجمه إلـــى اللغة التاميلية:

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

الطبعة الثالثة: ١٤٤٢/٨ هـــ.

ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤١٧هـ

***فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر***

**شعبة توعية الجاليات بالزلفي**
**الدين الحق- الزلفي**
**٣٣ ص؛ ١٢ × ١٧ سم**
**ردمك : ٩- ٣٣ - ٨١٣ -٩٩٦٠**
**(النص باللغة التاميلية )**
**١-الإســـلام ٢- التوحيـــد ٣- العقيـــدة الإسلامية**
**أ. العنوان**

رقم الإيداع : ١٧/٢٩٦٦

ردمك : ٩- ٣٣ - ٨١٣ - ٩٩٦٠

# முன்னுரை

உங்கள் கைகளில் தவழும் இந்நூல் இஸ்லாத்தைப் பற்றி மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது.

இதைப் படித்ததற்குப் பின்னால், இவ்வுலகில் பல்வேறு நாடுகளில் வாழும் 120 கோடிக்கும் அதிகமான மக்கள் பின்பற்றுகின்ற இம்மார்க்கத்தின் அடிப்படைகள் பற்றிய ஒரு தெளிவான சிந்தனையை பெறுவீர்கள்.

மேலும் இம்மார்க்கத்தைப் பற்றிய கூடுதலான விளக்கம் ஏதும் தேவைப்பட்டால் நாங்கள் விளக்கம் தருவதற்கும் வேறு பல புத்தகங்கள் தருவதற்கும் தயாராக உள்ளோம்.

# الدين الحق
# சத்திய மார்க்கம்

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற ஏகத்துவக் கலி மாதான் இஸ்லாத்தின் அடிப்படைச் சட்டமாகும். இந்த அடிப்படை வாய்ந்த உறுதியான சட்டமின்றி உயர்ந்த இஸ்லாமியக் கட்டடம் நிலை பெறாது. இதுவே இஸ்லாத்தில் நுழைபவன் ஆரம்பமாக அவசியம் மொழிய வேண்டிய கலிமாவாகும் இதை மொழிபவன் இதன் அர்த்தங்களையும் அவை அறிவித்து விட்டவற்றையும் உறுதியாக நம்பவேண்டும்.

## லாஇலாஹ இல்லல்லாஹ்வின் பொருள்

லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள் இவ்வுலகைப் படைத்தவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, இவ்வுலகை நிர்வகிப்பவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை, வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் இல்லை என்பதாகும்.

## அல்லாஹ் படைப்பாளன்

நூதனமான, அழகான, விசாலமான இவ்வுலகை அல்லாஹ்தான் படைத்தான். வினோதமான நட்சத்திரங் களும், நீந்துகின்ற கோளங்களும் அமைந்த வானத் தையும் அல்லாஹ் தான் படைத்தான். மலைகள்,

ஓடைகள், பரந்த மலைகள், ஆறுகள், மரங்கள், தோட்டங்கள், காற்று, தண்ணீர், திடல், கடல், இரவு, பகல் ஆகியவற்றையும், இவற்றில் வசித்து வருபவர்கள், நடந்து செல்பவர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கிய பூமியையும் படைத்தவன் அல்லாஹ்தான். இல்லாமல் இருந்த இவற்றை அவனே உருவாக்கினான். இவை மகத்துவமிக்க அல்லாஹ்வின் படைப்பாகும்.

அல்லாஹ் பூமியை தங்குமிடமாக்கி, அதில் வாழ்வ தற்குத் தேவையான, தோதுவான, குறிப்பிட்ட ஈர்ப்பு சக்தியை அமைத்து வைத்துள்ளான். அது அதிகரிக்கவும் செய்யாது குறையவும் செய்யாது. அதிகமாகி விட்டால் அதன் மீது ஆட, அசைவது சிரமமாகிவிடும். குறைந்து விட்டால் அதில் ஜீவிக்கின்ற அனைத்தும் பறந்துவிடும். அனைத்து வஸ்துக்களுக்கும் அவனிடம் ஓர் அளவுள்ளது.

வானிலிருந்து தூய்மையான தண்ணீரை இறக்கி வைத்தான். அந்த தண்ணீரின்றி வாழக்கையை நடத்த முடியாது. அந்தத் தண்ணீர் மூலம் செடி, கொடிகளையும் கனிவர்க்கங்களையும் அவனே வெளிப்படுத்துகிறான். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளுக்கும் மனிதர்களுக்கும் அதைக் குடிநீராக ஆக்கியுள்ளான். அத்தண்ணீரைப் பாதுகாத்துக் கொள்ளத் தோதுவாக

பூமியை அமைத்துள்ளான். அதில் ஊற்றுக்களையும், ஆறுகளையும் ஓடச் செய்துள்ளான்.

அல்லாஹ் படைத்த முதல் மனிதர், மனிதர்களின் தந்தையான ஆதம் (அலை) ஆவர். அவரைக் களிமண்ணால் உருவாக்கி பின்னர் சீராக்கி உருவம் கொடுத்தான். தனது அவரில் உயிரை ஊதினான். பின்னர் அவரிலிருந்து அதற்கான ஜோடியைப் படைத்தான். பின்னர் அற்பத்துளியான இந்திரியத் துளியிலிருந்து அவரது சந்ததியினரைப் படைத்தான்.

உன்னைப் படைத்த அல்லாஹ்வைச் சிந்தித்துப் பார்! நுட்பமான பல கருவிகளையும் பல்வேறு அமைப்பு களையும் உன்னில் நீ காண்பாய். அதன் செயல்பாடு களில் குறைவானதைத்தான் உன்னால் அறிந்து கொள்ள முடியும். அவ்வாறிருக்க அவற்றை நீ முழுமையாகத் தெரிந்து கொள்வதென்பது முடியாத காரியமாகும். அங்கு உணவை ஜீரணிக்கச் செய்வதற்கு ஒரு கருவி, சுவாசிப் பதற்கு வேறொரு கருவி, நரம்புகளை இயக்க மற்றொரு கருவி, தேவையில்லாதவற்றை வெளியேற்றுவதற்கு ஒரு கருவி, இப்படியே நாம் கணக்கிட்டுக் கொண்டிருந்தால் ஏராளமான கருவிகள் நம்மில் இருப்பதை ஒவ்வொரு நாளும் அறிந்து கொள்ள முடியும். நாம் அறிந்துள்ள வற்றை விட நாம் அறியாதவையே நம்மில் அதிகம் உள்ளன. உறுதி வாய்ந்த இந்த அமைப்பிலுள்ள

மனிதனை அல்லாஹ் விடுத்து வேறு யார் படைக்க முடியும்?

எனவே தான் பாவங்களில் மிகப் பெரும் பாவம் அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க அவனுக்கு நீ இணை கற்பிப்பதாகும். அல்லாஹ்வின் நூதனமான படைப்பின் பால் திறந்த உள்ளத்துடன் சிந்தித்துப் பார்! இதோ நீ சுவாசிக்கும் இக்காற்று எல்லா இடங்களிலும் நுழைகின்றது. அது பார்வைகளுக்குப் புலப்படாததாகவும் நிறமற்றதாகவும் உள்ளது. சில நிமிடங்கள் அக்காற்று நின்று விடுமானால் நீ மரணித்து விடுவாய் என்பதை சிந்தித்துப் பார்!

நீ அருந்தும் தண்ணீரும் உண்ணும் உணவும் நீ நேசிக்கின்ற பிற மனிதர்களும் நீ நடந்து செல்கின்ற இப்பூமியும் நீ காணுகின்ற வானமும் மற்றுமுள்ள எல்லாப் பொருட்களும், இப்படைப்பினங்களில் உன்னால் காண முடியாத சிறிதும் பெரிதுமான சகல வஸ்துக்களும், யாவற்றையும் அறிந்தவனான அல்லாஹ்வின் படைப்பில் உள்ளவையாகும்.

அல்லாஹ்வின் படைப்புகளைச் சிந்திப்பதன் மூலம் அல்லாஹ்வின் கண்ணியத்தையும் அவனது வல்லமை யையும் நாம் அறிந்து கொள்ள முடியும். மிகப் பெரும் நுட்பமும் பேராற்றலுமிக்க, இப்பிரமாண்டமான, நூதன மான, உறுதிமிக்க, ஒன்று மற்றொன்றுடன் சம்பந்தப்

பட்டுள்ள இப்படைப்பினங்களை இல்லாமையிலிருந்து உருவாக்கிய படைப்பாளனை நம்பாதவன் தான் மனிதர்களில் மிகப் பெரும் மடமையும் வழிகேடும் உடையவன். மகத்துவமிக்க இப்படைப்பாளனைப் போன்று வேறெதுவுமேயில்லை. அவன் யாவற்றையும் செவியேற்பவன், யாவற்றையும் பார்ப்பவன். அவனுக்கு நிகர் அவன் படைப்பினங்களில் எதுவுமில்லை.அல்லாஹ் நம்மை வானத்திற்கு மேலிருந்து பார்த்துக் கொண் டிருக்கிறான். நாம் அவனைக் காண முடியாது.

அல்லாஹ் எல்லா வஸ்துக்களின் மீதும் ஆற்றல் உள்ளவன். வாழ்வும் மரணமும் அவனது கையில் தான் இருக்கிறது. எல்லாப் படைப்பினங்களும் அவன் பக்கமே தேவையாகின்றன. அவன் அனைத்தையும் விட்டும் தேவையற்றவன். சகல வஸ்துக்களையும் சூழ்ந்தறிபவன். நமது நாவுகள் பேசுபவற்றையும் நமது உறுப்புகள் செய்பவற்றையும் அவன் அறிவான், மட்டுமின்றி நமது உள்ளங்கள் மறைத்து வைத்திருப்பவற்றையும் அறிவான்.

அல்லாஹ் நம்மை நன்கு அறிபவனாகவும் நமது செயல்களை உள்விளங்கி அறிபவனாகவும் இருக்கிறான். வானம், பூமியிலுள்ள எப்பொருளும் அவனுக்கு மறைந் ததாக இல்லை. அவன் பராமுகமாக இருக்க மாட்டான் மறக்கவோ, தூங்கவோ மாட்டான். குறைவும் குறையு

மில்லாத பூரணமான தன்மைகள் அவனுக்கு இருக்கின்றன. அல்லாஹ்வின் ஆட்சியில் அவனுக்கு நிகராக, இணையாக, ஒப்பாக எவருமில்லை. அவன் மனைவி, குழந்தையை விட்டும் தூய்மையானவன். மட்டுமல்ல இவ்வனைத்தை விட்டும் தேவையற்றவன். எனவே தான் வணக்கத்தில் எதையும் அல்லாஹ் அல்லாதவனுக்குச் செய்யக் கூடாது என லாஇலாஹ இல்லல்லாஹ்விற்கு அர்த்தம் கொள்ளப்படுகிறது.

எனவே உண்மையில் வணங்கத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனே இறைத்தன்மைகளும் பரிபூரணமும் ஒருங்கே அமையைப் பெற்றவன். அவனே படைப்பாளன், உணவளிப்பவன், பேருபகாரம் செய்பவன், உயிர் கொடுப்பவன், மரணிக்கச் செய்பவன், படைப்பினங்களுக்கு உதவி புரிபவன், அவன் மட்டுமே வணங்கத் தகுதியானவன். இணையற்றவன்.

எனவே ஒருவன் அல்லாஹ்வை விடுத்து அவன் அல்லாதவனை வணங்கினால் அவன் இணைவைத்தவனாகவும் நிராகரித்தவனாகவும் ஆகிவிடுகிறான். ஆகவே காலில் விழுதல், குனிதல், பயத்துடன் பணிதல் ஆகியவற்றை அல்லாஹ் அல்லாதவனுக்கு செய்யக் கூடாது.

அல்லாஹ்விடமே அபயம் தேட வேண்டும், பாதுகாப்புத் தேட வேண்டும், பிரார்த்தனை செய்ய வேண்டும். அல்லாஹ்விடமே தேவைகளைக் கேட்க வேண்டும்.

வணக்க, வழிபாடுகள் மூலம் அவனை நெருங்க வேண்டும். இவற்றில் எதனையும் அல்லாஹ் அல்லாத வருக்குச் செய்யக்கூடாது. அல்லாஹ்வை நாம் வணங்கு வதற்காகவும் சரியான முறையில் அவனை வணங்கி வெற்றி பெறுகிறோமா எனச் சோதிப்பதற்காகவுமே நம்மைப் படைத்துள்ளான். எனவே அல்லாஹ்வை வணங்கி, நேசித்து, பணிந்து, அவனது ஏவல்களுக்குக் கட்டுப்பட்டு, விலக்கல்களைத் தவிர்ந்து கொள்கிறவர் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தையும் அன்பையும் அடைந்து கொள்கிறார். அவருக்கு அவன் அழகிய கூலி வழங்குவான்.

படைத்து, உணவு அளித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ்வை வணங்குவதை விடுத்து, தற்பெருமை கொண்டு, அவனது ஏவல்களுக்குக் கட்டுப்படாமல், விலக்கல்களைத் தவிர்ந்து கொள்ளாதவன் அல்லாஹ் வின் கோபத்திற்கும் வேதனைக்குரிய தண்டனைக்கும் ஆளாகிவிடுகிறான்.

அல்லாஹ் நம்மை வீணாகப் படைக்கவுமில்லை, வெறுமனே விட்டுவிடவுமில்லை. இவ்வுலகுக்கு வந்த மனிதர்களில் எவன் தனக்குப் பார்வையும் செவிப் புலனும், வெகுமதியாக வழங்கப்பட்டுள்ளன. பின்னர் நாம் சில காலம் வாழ்ந்து மரணித்துவிடுவோம் என்று கருதுகிறானோ, இன்னும் இவ்வுலகிற்கு நாம் எப்படி,

எங்கிருந்து வந்தோம்? பின்னர் எங்கே செல்ல இருக்கிறோம்? என்பதைத் தெரியாமலும் இருக்கிறானோ அவன் தான் மிகப் பெரும் அறிவிலி. அல்லாஹ் கூறுகிறான்: “உங்களை வீணாகப் படைத்துள்ளோம் என்றும், நம்மிடம் திரும்பக் கொண்டுவரப்படமாட்டீர்கள் என்றும் நினைத்து விட்டீர்களா?” (23:115)

நம்மில் இறைவனை நம்பி, அதில் உறுதியாக இருந்து, அனது சட்டப்படி நடந்து, பிரியத்துடனும் பணிவுடனும் அவனை வணங்கி, வழிபாடுகள் செய்வதன் மூலம் அவனை நெருங்குபவனும் படைத்து, உருவம் கொடுத்த அல்லாஹ்வை நிராகரித்து, அவனுடைய அத்தாட்சிகளைப் பொய்ப்படுத்தி, அவனது ஆணைக்குக் கட்டுப்படுவதை விட்டுவிடுகிறவனும் அல்லாஹ்விடம் சமமாக மாட்டார்கள். முதலாமவன் அல்லாஹ்விடம் கண்ணியம், நற்கூலி, திருப்தி ஆகியவற்றை அடைந்து கொள்வான். இரண்டாமாவனை கோபம், தண்டனை மற்றும் இழிவு பிடித்துக் கொள்ளும்.

இந்த நிலை மக்கள் மரணமடைந்து, அவர்களின் மண்ணறைகளிலிருந்து எழுப்பப்படும் நாளிலாகும். அந்நாளில் நேர்மையாக நடந்து கொண்டவர் அருள் மிக்க சுவர்க்கத்தையும். மரியாதையையும் கூலியாக வழங்கப்படுவார், அல்லாஹ்வை வணங்காமல்,

பெருமையாக நடந்து கொண்ட கெட்டவன் நரகில் தண்டிக்கப்படுவான்.

## முஹம்மத் அல்லாஹ்வின் திருத்தூதர்

முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை நம் புவது இஸ்லாமிய அடிப்படைக் கடமைகளில் முதல் கடமையில் இரண்டாவது பகுதியாகும். இது ஒரு கட்டடத்தின் அமைப்புக்கு தலையாய அடிப்படையாகும். (லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்) என்ற இவ்விரண்டையும் மொழிவதன் மூலம் ஒருவன் முஸ்லிமாகிவிடுகிறான். (எனவே விருப்பம் உள்ளவர்) வணக்கத்திற்குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென சாட்சி சொல்லிக் கொள்ளட்டும்.

## ரசூலின் அர்த்தமென்ன? முஹம்மது (ஸல்) யார்? அவர்களல்லாத வேறு தூதர்கள் உள்ளனரா?

ரசூல் என்றால் இறைத்தூதர். இவர் உண்மை பேசும், அழகிய குணங்களுள்ள, உயர்ந்த தன்மையுள்ள மனிதர். மனிதர்களிலிருந்தே அல்லாஹ் அவரைத் தேர்வு செய் கிறான், மார்க்க விஷயங்களில் அல்லது மறைவான விஷயங்களில், தான் விரும்பியவற்றை அவருக்கு அறிவித்துக் கொடுக்கிறான். அவற்றை அவர் மக்களுக்கு எத்திவைக்கும்படி ஏவப்படுவார். எனவே ரசூல் என்பவர் ஏனைய மனிதர்களைப் போன்ற ஒரு மனிதரே. ஏனைய

மனிதர்கள் சாப்பிடுவது, குடிப்பது போன்று இவரும் சாப்பிடுவார், குடிப்பார். மற்ற மனிதர்களுக்குத் தேவைப் படுபவை இவருக்கும் தேவைப்படும்.ஆயினும் அல்லாஹ் விடமிருந்து வருகின்ற இறைச் செய்தியின் மூலம் ஏனைய மனிதர்களை விட்டும் வித்தியாசப்படுகிறார்.

அவர் மக்களுக்கு எத்திவைக்க வேண்டிய மார்க்க விஷயங்கள் மற்றும் மறைவான விஷயங்களில் எவற்றை அல்லாஹ் விரும்புகிறானோ அவற்றை அவன் அவருக்கு அறிவித்துக் கொடுக்கிறான். இன்னும் அவர் பெரும் பாவங்களில் விழுந்து விடாமலும், அல்லாஹ்வின் தூதுச் செய்தியை மக்களுக்கு எத்திவைப்பதில் தவறு செய்தி டாமலும் அல்லாஹ் பாதுகாத்துள்ளான் என்ற இந்த விஷயத்திலும் அவர் ஏனைய மனிதர்களை விட தனித்துவம் பெற்றவராக இருக்கிறார்.

மனிதர்களின் தந்தை ஆதமுக்குப் பின் தூதர்களில் முதலாமவர் நூஹ் -நோஹா ஆவார். இவருக்கும் ஆதமுக்குமிடையே பத்து நூற்றாண்டுகள் இருந்தன. அவர்களின் மக்கள் வழி தவறி, அல்லாஹ்வை விடுத்து சிலைகள், கற்கள், மண்ணறைகள் போன்றவற்றை வணங்குபவர்களாக ஆகிவிட்ட பிறகு அல்லாஹ்வை மட்டும் வணங்குவதன் பக்கம் அவர்களைத் திருப்பிக் கொண்டு வருவதற்காக அல்லாஹ் நூஹ் (அலை) அவர்களை அனுப்பி வைத்தான். அவர் நீண்ட காலம் தம் மக்களை அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டு

மென்று அழைத்துக் கொண்டே இருந்தார். எனினும் அவரை குறைவான மக்களே ஏற்றுக் கொண்டனர்.

அல்லாஹ் இவருக்குப் பின்னர் பூமியின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்ககளுக்கு பல தூதர்களை அனுப்பி வைத்தான். அச்சமூட்டி எச்சரிக்கும் தூதர் வராத எந்த சமுதாயமுமில்லை. அவர்களில் சிலரின் வரலாற்றை அல்லாஹ் நமக்கு அறிவித்துள்ளான். அதிகமானோர் பற்றி நமக்கு அறிவிக்கவில்லை.அவர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு எதையும் இணை கற்பிக் காமல் அவனை மட்டுமே வணங்க வேண்டும், அவன் அல்லாதவர்கள் வணங்கப்படக் கூடாது என்ற ஒரே செய்தியைக் கொடுத்தே அனுப்பப்பட்டனர்.

முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதர்களில் இறுதி யானவர். அல்லாஹ் அவர்களை மக்காவில் தூதராக அனுப்பினான். அவர்கள் இறைத்தூதர் என்பதற்குப் பல அத்தாட்சிகளையும், அற்புதங்களையும் வழங்கி இருந்தான். தூதர்களின் வரிசையை இவர்களைக் கொண்டே நிறைவு செய்தான். அவர்களுக்கு வழங்கிய மார்க்கத்தை எல்லா மார்க்கங்களுக்கும் இறுதியாக ஆக்கினான். இம்மார்க்கத்தை உலகம் முடியும் காலம் வரை மாற்ற முடியாத அளவிற்குப் பாதுகாத்து வைத் துள்ளான். முஹம்மது (ஸல்) அவர்கள் யார்? அவர்களின்

மக்கள் யார்? அவரை அல்லாஹ் எப்படி அனுப்பி வைத்தான்? என்பதைப் பார்ப்போம்.

## அவரின் குடும்பமும் சிறப்பும்

முஹம்மத் அப்துல்லாஹ்வின் மகன் ஆவார். அவரின் பாட்டனார் அப்துல் முத்தலிப். இவர் குறைஷி குலத்தைச் சார்ந்தவர். முஹம்மத் கி.பி. 571 ல் மக்காவில் பிறந்தார். தனது தாயின் வயிற்றிலிக்கும்போதே தந்தையை இழந்தார். அவரது பாட்டனார் அப்துல் முத்தலிபின் பராமரிப்பில் அனாதையாக வளர்ந்து வந்தார். அவரின் பாட்டனார் மரணமடைந்த பின்னர் அவரது பெரிய தகப்பானர் அபூதாலிப் அவரைப் பராமரித்து வந்தார்.

## குண நலன்கள்

முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையாளர், நம் பிக்கைக்குரியவர், அழகிய குணமுடையவர், சுவையாகப் பேசுபவர், தெளிவான பாஷையில் பேசுபவர், நெருங் கியவர், தூரமானவர் அனைவராலும் விரும்பப்பட்டார், தனது மக்களால் கண்ணியப்படுத்தப்பட்டார், அல்அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்ற பட்டப் பெயர் சூட்டப் பட்டிருந்தார். அம்மக்கள் பயணம் மேற்கொள்கிறபோது தங்களின் பொருட்களை அவரிடமே ஒப்படைத்துச் செல்வர். அழகிய குணமுடையவராக இருந்த அவர் அழகிய தோற்றமுடையவராகவும் இருந்தார். அவரைப்

பார்ப்பவரின் கண் சோர்வடையாமல் பார்த்துக்கொண்டே யிருக்கும்.

## குறைஷியர், அரபியர்

நபி(ஸல்)அவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் சங்கைக்குரிய மக்காவில் சிறப்புமிக்க கஅபத்துல்லாஹ் வின் சுற்றுப் புறத்தில் வசித்து வந்தனர். அம்மக்களும் அம்மக்களின் கோத்திரத்தினரும், கல், மரம், தங்கம் போன்றவற்றில் சிலைகள் செய்து அவற்றை கஅபத்துல் லாஹ்வின் சுற்றுப்பாகங்களில் வைத்துக் கொண்டனர்.

அவை தூய்மையானவை எனவும் நன்மை, தீமை யாவும் அவற்றின் கைகளில் தான் உள்ளது எனவும் நம்பினர். இத்துடன் வேறு சில விக்கிரகங்களையும், மரங்களையும் மக்காவுக்கு வெளியே வைத்து வணங்கினர். அவர்களைச் சுற்றியுள்ள மக்களுடன் இவர்களின் வாழ்க்கை தற்பெருமை, ஆணவம், பிறருக்கு கொடுமை இழைப்பது போன்றவற்றிலேயே இருந்து வந்தது. அவர்களிடம் வீரம், விருந்துபசாரம், உண்மை பேசுவது போன்ற சில நல்ல பழக்கங்களும் இருந்தன.

## முஹம்மது (ஸல்) நபியாக்கப்படுதல்

நுபி (ஸல்) அவர்கள் தங்களின் நாற்பதாம் வயதில் மக்காவுக்கு வெளியேயுள்ள ஹிராக் குகையில் இருக்கும் போது வானிலிருந்து வஹி (இறைச் செய்தி) இறங்கியது. அவர்களிடம் ஜிப்ரீல் என்ற வானவர் வந்து, “படைத்த உம்

இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை அலக் என்ற நிலையிலிருந்து (கருவுற்ற சினை முட்டை யிலிருந்து) மனிதனைப் படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் மாபெரும் கொடையாளன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். மனிதனுக்கு அவன் அறியாத வற்றை கற்றுத் தந்தான்." (96:1-5) எனக் கூறினார்.

அவ்வானவர், நபி(ஸல்)அவர்களை விட்டுச் சென்ற பின்னர் அவர்கள் பயந்து கொண்டு வீட்டிற்குத் திரும்பி தம் மனைவி ஹதீஜாவிடம் என்னைப் போர்த்துங்கள்! எனக்கு பயமாக இருக்கிறதெனக் கூறினார்கள். அதற்கு ஹதீஜா அவர்கள் நபி(ஸல்)அவர்களிடம், "அவ்வாறல்ல! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டான். தாங்கள் உறவினர் களை அனுசரிக்கிறீர்கள், (சிரமப்படுவோரின்) சுமைகளை சுமந்து கொள்கிறீர்கள், வறியோருக்காக உழைக் கிறீர்கள், உண்மையான சோதனையில் (ஆட்பட் டோருக்கு) உதவுகிறீர்கள்" எனக் கூறினார்கள்.

அதன் பிறகு ஜிப்ரீல், நபியவர்களிடம், அவர்களை அல்லாஹ் படைத்த தோற்றத்துடன் வானை அடைத்துக் கொண்டு வந்து. "முஹம்மதே நான் ஜிப்ரீல், நீர் இறைத் தூதர்" எனக் கூறினார். பின்னர் மக்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும் எனவும், இணைவைப்பு, நிராகரிப்பு பற்றி அவர்களை எச்சரிக்க வேண்டும் எனவும்

அழைப்புப் பணி செய்திட அவர்களுக்கு வானிலிருந்து தொடராக இறைச் செய்தி வந்து கொண்டிருந்தது.

தமது மக்களில் தனக்கு நெருக்கமானவர்களில் ஒவ்வொருவராக இஸ்லாத்தை ஏற்குமாறு அழைக்க ஆரம்பித்தார்கள். முதலாவதாக தமது மனைவி குவைலதின் மகள் ஹதீஜாவும் தம் நண்பர் அபூபக்ரும் தமது பெரிய தகப்பனார் மகன் அலியும் அவர்களை நபியாக ஏற்றுக் கொண்டனர்.

நபி(ஸல்)அவர்கள் அழைப்புப் பணி செய்து வருவதை அவர்களின் மக்கள் அறிந்த போது அவர்களை எதிர்க்கவும், சதி செய்யவும், பகைக்கவும் ஆரம்பித்தனர். நபி(ஸல்)அவர்கள், லாஇலாஹ "இல்லல்லாஹ் எனக் கூறுங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று கூறி, அவர்களை இஸ்லாத்தின் பால் தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருந்தார்கள். அவர்கள், "இவரென்ன கடவுள்களை எல்லாம் ஒரே கடவுளாக ஆக்கிவிட்டாரா? இது வியப்பான விஷயமாக இருக்கிறதே!" எனக் கூறிக்கொண்டிருந்தனர்.

அல்லாஹ்விடமிருந்து பல திருவசனங்கள் இறங்கிக் கொண்டிருந்தன. அவை அவர்களை நேர்வழியின் பால் அழைப்பு விடுத்துக் கொண்டும் வழிகேட்டை விட்டும் எச்சரிக்கை விடுத்துக் கொண்டுமிருந்தன. எனினும் இவை அவர்களிடம் பிடிவாதத்தையும் சத்தியத்தை ஏற்றுக் கொள்வதை விட்டும் பெருமையடிப்பதையும் தான்

அதிகப்படுத்தின. இஸ்லாத்தில் இணைவோரை கடும் தொல்லை செய்ய ஆரம்பித்தனர். குறிப்பாக பலவீனர்களை கடும் தொல்லைப்படுத்தினர்.

குறைஷியர் நபி(ஸல்)அவர்களிடம் பொன்னையும் பொருளையும் பல்வேறு ஆசைப் பொருட்களையும் காட்டி அழைப்புப் பணிக்குப் பேரம் பேசினர். அல்லாஹ்வை விடுத்து அவர்கள் கண்ணியப்படுத்தி, வணங்கிக் கொண்டிருக்கின்ற கடவுள்களுக்கு தீங்கு ஏற்படுகின்ற இந்தப் பிரச்சாரத்தை விட்டு விடும்படியும் வேண்டிக் கொண்டனர். நபி(ஸல்) அவர்கள் தமது கொள்கையில் உறுதியாகவே இருந்தார்கள். ஏனெனில் இவ்விஷயம் மக்களுக்கு எத்தி வைக்க வேண்டுமென அல்லாஹ்வால் ஏவப்பட்ட விஷயமாகும். இதை அவர்கள் விட்டு விட்டால் அல்லாஹ் அவர்களைத் தண்டித்து விடுவான்.

நுபி (ஸல்), தம் மக்களிடம் நான் உங்களுக்கு நன் மையையே விரும்புகிறேன் நீங்கள் என் மக்கள், எனது உறவினர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக எல்லா மக்களிடம் நான் பொய் சொல்லுவதாக வைத்துக் கொண்டாலும் உங்களிடம் பொய் சொல்லமாட்டேன். மக்கள் அனைவருக்கும் நான் கேடு செய்வதாக வைத்துக் கொண்டாலும் உங்களுக்குக் கேடு செய்ய மாட்டேன் எனக் கூறினார்கள்.

அழைப்புப் பணியை முடக்கி விட பேரம் பேசியதில் பலன் கிடைக்காமல்போனபோது நபி(ஸல்)அவர்களிடமும் அவர்களைப் பின்பற்றியவர்களிடமும் குறைஷியரின் பகைமை அதிகரித்தது. பின்னர் யதிரிப்பட்டணத்திலிருந்து சிலர் நபி(ஸல்)அவர்களிடம் வந்தனர். (யத்ரிப் என்பது மதீனாவின் பழைய பெயராகும்) அவர்களை நபி(ஸல்) இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு இஸ்லாத்தைப் போதிப்பதற்காக தமது நண்பர்களில் ஒருவரான முஸ்அப் பின் உமைர் என்பவரை அனுப்பி வைத்தார்கள். அவர் மூலம் மதீனாவாசிகளில் அதிக மானோர் இஸ்லாத்தில் இணைந்தனர். மறு ஆண்டு அவர்கள் இஸ்லாத்திலேயே இருப்பதாக உடன்படிக்கை செய்வதற்காக நபி (ஸல்) அவர்களிடம் வந்தனர்.

பின்னர் நபி(ஸல்)அவர்கள் தங்களின் தோழர்களில் கொடுமைக்காளானவர்களை மதீனா நகருக்கு ஹிஜ்ரத் செய்யும்படி ஏவினார்கள். அவர்கள் கூட்டம் கூட்டமாகவும், தனித்தனியாகவும் ஹிஜ்ரத் செய்தனர். (இவர்கள் முஹாஜிர்கள் என அழைக்கப்பட்டனர்). இவர்களை மதீனாவாசிகள் மகிழ்சியுடனும் மரியாதையுடனும் வரவேற்று தமது இல்லங்களில் விருந்தளித்தனர். தம் பொருட்களையும் வீடுகளையும் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். (இதனால் அன்ஸார்கள் என இவர்கள் அழைக்கப்பட்டனர்).

குறைஷியர் நபியவர்கள் ஹிஜ்ரத் செய்ததை அறிந்த போது அவர்கள் தூங்கும் இல்லத்தை முற்றுகையிட்டு, அவர் வீட்டை விட்டு வெளியேறுகிறபோது அனைவரும் சேர்ந்து ஒருவர் வெட்டுவது போல ஒரே வெட்டாக வெட்டி கொலை செய்யதிட திட்டம் தீட்டினர். இவர்களின் சதித் திட்டத்தை விட்டும் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாத்தான். நபியவர்கள் முற்றுகையிட்டடிருந்தவர் களுக்குத் தெரியாமலேயே வீட்டை விட்டு வெளியேறி, அபூபக்ரைச் சென்றடைந்தார்கள். நுபி (ஸல்) அவர்கள் அலியை மக்காவில் தங்கி, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களை உரியவரிடம் ஒப்படைக்கக் கூறினார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வருபவருக்கு விலையுயர்ந்த பரிசி வழங்கப்படுமென அறிவிப்புச் செய்தனர். ஆயினும் அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்தான், அவர்கள் தமது நண்பருடன் சுகமாக மதீனாவை அடைந்தனர்.

நுபி (ஸல்) அவர்களை மதீனாவாசிகள் பெரும் ஆனந்தத்துடன் வரவேற்றனர். அல்லாஹ்வின் தூதரை வரவேற்பதற்காக தம் வீடுகளை விட்டும் வெளியேறிக் காத்திருந்தனர். “அல்லாஹ்வின் தூதர் வந்துவிட்டார், அல்லாஹ்வின் தூதர் வந்து விட்டார்” எனக் கூறிக் கொண்டிருந்தனர்.

இங்கு வந்த பின்னர் நபி(ஸல்)அவர்கள் மக்களை இஸ்லாத்தின் பால் தீவிரமாக அழைப்புக் கொடுக்க ஆரம்பித்தனர். அவர்களைப் பின்பற்றுபவர்கள் அதிகரித்தனர். பல்வேறு இடங்களுக்கு இஸ்லாம் பரவத் தொடங்கியது. இறுதியாக அவர்கள் எங்கிருந்து வெளி யேறினார்களோ அந்த மக்காவிலேயே பரவத் தொடங்கியது. அவர்கள் தனது 63 ஆம் வயதில் மரண மடைந்தார்கள்.

இதோ இவர்தான் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்)அவர்கள். இவரே நபிமார்களில் இறுதியானவர். மனித சமுதாயம் முழுவதற்கும் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்பவராகவும், நரகம் பற்றி எச்சரிக்கை செய்பவராகவும் அல்லாஹ் இவரை அனுப்பி வைத்தான். நபி(ஸல்) அவர்கள் அச்செய்தியை எத்திவைத்தார்கள். தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதை நிறைவேற்றினார்கள். சமுதாயத்திற்கு உபதேசம் செய்தார்கள்.

நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் வானிலிருந்து இறக்கிய திருவசனங்களின் மூலம் உறுதிப்படுத்தினான். உலகம் தோன்றிய காலம் முதல் இறுதி காலம் வரை உலக மக்கள் அனைவரும் ஒன்று கூடி, அவர்களில் சிலர், சிலருக்கு உதவி செய்து கொண்டாலும் இது போன்ற ஒரு வசனத்தை அவர்களால் கொண்டு வர முடியாது.

இக்குர்ஆன் 114 அத்தியாயங்கள் கொண்டதாகும். 6000 திருவசனங்களுக்கும் அதிகம் அதிலுள்ளன. ஒவ்வொரு காலத்திலும் வாழக்கூடியவர்களிடமும் அல்லாஹ் இது போன்ற ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வர சவால் விட்டுக் கொண்டிருக்கிறான். குர்ஆனில் மிகச் சிறிய அத்தியாயம் மூன்று வசனங்கள் மட்டும் கொண்டதாகும். மக்கள் இது போன்று கொண்டு வநிருப்பார்களானால் நிச்சயமாக இது அல்லாஹ்விடமிருந்து வந்ததல்ல என அறிந்து கொள்ளலாம். இது அல்லாஹ் தனது தூதருக்கு அருளிய அற்புதங் களில் மிகப்பெரும் அற்புதமாகும். இன்னும் நபி (ஸல்) அவர்களுக்கு வழமைக்கு மாற்றமாக ஏற்படக் கூடிய பல்வேறு அற்புதங்களை வழங்கி உதவி புரிந்தான். அவற்றில் சில:

1. அல்லாஹ்விடம் அவர் பிரார்த்தித்து, அவரது கையை ஒரு பாத்திரத்தில் வைத்தபோது அவர்களின் விரல்களுக்கிடையிலிருந்து தண்ணீர் ஊற்றெடுத்து ஓடியது, அதிலிருந்து ஆயிரத்துக்கும் அதிகமான போர்வீரர்கள அருந்தினர்.

2. அல்லாஹ்விடம் அவர் பிரார்த்தித்து, அவரது கையை ஒரு பாத்திரத்தில் வைத்தபோது பாத்திரத் திலுள்ள உணவு அதிகமானது. அதிலிருந்து அவர்களது 1500 தோழர்கள் உணவருந்தினர்.

3. அல்லாஹ்விடம் தமது இரு கைகளை உயர்த்தி, மழை வேண்டி பிரார்த்தித்தார்கள். அவர்கள் அவ்விடத்தை விட்டுச் செல்வதற்கு முன்பாகவே மழை நீர் அவர்களின் சங்கைக்குரிய முகத்தில் சொட்டுச் சொட்டாக விழுந்தது. இன்னும் இது போன்ற அநேக அற்புதங்கள் உள்ளன.

நபி(ஸல்)அவர்கள் தம் சொல், செயல் அனைத்திலும் ஓர் அழகிய முன்மாதியாகத் திகழ்ந்தார்கள். அல்லாஹ் விடமிருந்து வரும் கட்டளைகள் அனைத்தையும் அவர்களே முதலில் செயல்படுத்துபவர்களாக இருந்தனர். வணக்க, வழிபாடுகள் செய்வதில் மிக்க ஆர்வமுடைய வர்களாக இருந்தனர். மனிதர்களில் மிக்க மரியாதைக் குரியவராக இருந்தனர். தம்மிடமுள்ள பொருள்கள் அனைத்தையும்- அல்லாஹ்வின் பாதையில்- ஏழைகள், யாசிப்போர், தேவையுடையோருக்குச் செலவிட்டனர். மட்டுமின்றி தாம் விட்டுச்சென்ற சொத்தையும் அல்லாஹ் வின் பாதையிலேயே செலவிட்டனர்.

நபி(ஸல்)அவர்கள் தம் தோழர்களிடம் கூறினார்கள்: “நாங்கள் நபிமார்களின் கூட்டத்தைச் சார்ந்தவர்கள், எங்கள் சொத்துக்கு யாரும் வாரிசுரிமை பெற முடியாது, நாங்கள் விட்டுச் செல்பவை தர்ம நிதியாகும்.”

அவர்களின் நற்குணத்தை எவரும் அடைய முடியாது, அவர்களுடன் தோழமை கொள்ளும் எவரும் தனது

உள்ளத்தின் ஆழத்திலிருந்தல்லாமல் நேசம் கொள் வதில்லை. இதனால் நபி(ஸல்)அவர்கள், தமது தோழர் களிடம் அவர்களின் பிள்ளைகள், பெற்றோர், பிற மக்கள் யாவரையும் விட அதிக நேசத்திற்குரியவராகி விடுகிறார்கள்.

**இஸ்லாத்தின் கடமைகள்:**

1. **சாட்சி பகர்தல்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென சாட்சி பகர்வது. இதுவே இஸ்லாத்தில் நுழைய விரும்புபவர் கட்டாயம் கூற வேண்டிய முதல் வார்த்தை. இதைக் கூறுபவர் இதன் அர்த்தங்கள் அனைத்தையும் நாம் முன்னர் விளக்கிக் கூறியதுபோன்று உறுதிகொண்டவராகக் கூறவேண்டும்.

“நிச்சயமாக அல்லாஹ் ஒருவனே. அவன் யாரையும் பெறவுமில்லை, யாருக்கும் பெறக்கவுமில்லை, அவனுக்கு நிகராக எவருமில்லை. நிச்சயமாக அவனே படைப்பவன். அவனல்லாத அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவை. அவன் மட்டுமே வணங்கப்படுவதற்குத் தகுந்தவன்” என உறுதியாக நம்பிக்கைக் கொள்ள வேண்டும். அவன் அல்லாத வேறு கடவுளில்லை, அவனல்லாத வேறு இரட்ஷகன் இல்லை.

முஹம்மத்(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதருமாவார், அவருக்கு அல்லாஹ்விடமிருந்து

வஹி (இறைச் செய்தி) இறங்குகிறது. அவனது ஏவல் களையும் விலக்கல்களையும்(மக்களுக்கு) எத்திவைப்பார். அவர் அறிவித்தவற்றை உண்மைப்படுத்துவதும் அவர் ஏவியவற்றிற்கு கட்டுப்படுவதும் அவர் எச்சரித்து விலக்கிய வற்றைத் தவிர்ந்து கொள்வதும் கட்டாயமாகும்.

2. **தொழுகையை நிலை நிறுத்துதல்:** இது ஒரு நாளைக்கு ஐந்து வேளைகளாகும். தொழுகையில் அடிமைத்தனத்தின் அம்சங்களையும் அல்லாஹ்வுக்குப் பணிவதையும் வெளிப்படுத்த வேண்டும். நிலையில் திருக்குர்ஆன் வசனங்களை அடியான் பணிவுடன் ஓத வேண்டும். பலவகையான திக்ருகள், புகழ் வார்த்தை களைக் கொண்டு அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்த வேண்டும். அவனுக்காக குனிந்தும் சாஸ்டாங்கம்(சுஜூத்) செய்தும் அவனிடம் உரையாடவும், பிரார்த்திக்கவும் வேண்டும். அவனது மகத்தான உதவியை வேண்ட வேண்டும். இதுவே அடியானுக்கும் அவனைப் படைத்த நாயனுக்கும் இடையே உள்ள தொடர்பாகும்.

அடியானின் இரகசியத்தையும் பரகசியத்தையும் சுஜூத் செய்பவர்களுடன் சுஜூத் செய்வதையும் அல்லாஹ் அறிகிறான். இது அல்லாஹ்வை நெருங்குவதற்கும் அவனுடைய திருப்பொருத்தத்தையும் நேசத்தையும் பெறுவதற்கும் காரணமாக உள்ளது. அல்லாஹ்வை வணங்குவதை விட்டும் பெருமை கொண்டவனாக

யாரேனும் இத் தொழுகையை விட்டு விட்டால் அவன் மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான், அவனை சபித்து விடுகிறான், அவன் இஸ்லாத்தை விட்டே வெளியேறி விடுகிறான்.

3. **ஜகாத்:** இது ஒருவன் தனது மூலச் சொத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குவதாகும். இதை அல்லாஹ் செல்வந்தர்களுக்குக் கடமையாக்கி யுள்ளான். இது தகுதிவாய்ந்த ஏழைகள் மற்றும் யாசிப்போரின் தேவையை நிறைவேற்றுவதற்காக கொடுக்கப்படும். ரொக்கப் பணத்தில் இதன் அளவு இரண்டரை சதவிகிதமாகும். மூலச் சொத்திலிருந்து இதனை ஜகாத் யாருக்குக் கடமையாகுமோ அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கொடுக்க வேண்டும். இக்கடமை கூட்டு வாழ்க்கையில் சமூக மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தி அன்பு பரவுவதற்கும், அவர்களிடையே பரஸ்பர உதவி ஏற்படுவதற்கும், ஏழைகள் பணக்காரர்கள் மீது பொறாமை கொள்வது நீங்குவதற்கும் காரணமாக இருக்கிறது.

4. **நோன்பு:** நோன்பு என்பது அதிகாலை உதயமான திலிருந்து சூரியன் மறையும் வரை அல்லாஹ்வுக்கு வழிபாடு செய்யும் எண்ணத்துடன் உண்ணாமல், பருகாமல், உடலுறவு கொள்ளாமல் இன்னும் (நோன்பை

முறித்துவிடக்கூடிய) ஏனைய காரியங்களை விட்டும் விலகி இருப்பதாகும்.

ரமழானில் நோன்பு நோற்பது கடமையாகும். இது அரபி மாதக் கணக்கின்படி ஒன்பதாவது மாதமாகும். அம்மாதத்தில் தான் நபி(ஸல்) அவர்களுக்குக் குர்ஆன் இறங்கத் தொடங்கியது. நோன்பின் மிகப் பெரும் பலன்கள் பொறுமையாக இருக்கப் பழகிக் கொள்வது, இறையச்சத்தை பலப்படுத்திக் கொள்வது, உள்ளத்தில் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வது போன்றவையாகும்.

நோன்பு அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையே உள்ள ஓர் இரகசியமாகும். ஏனெனில் மனிதன் தனித்திருக்கும்போது நோன்பை விட்டுவிட்டு உண்ணவும் குடிக்கவும் அவனால் முடிந்தபோதும் இப்படிச் செய்வதை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது என்பதைத் தெரிந்துகொண்டு இவற்றையெல்லாம் விட்டு விடுகிறான். மேலும் நோன்பு இறையச்சமும் இறை நம்பிக்கையும் அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளது. இதனால் தான் நோன்பாளிக்கு மகத்தான கூலி கிடைக்கிறது.

5. **ஹஜ்:** அல்லாஹ்வின் சங்கைக்குரிய இல்லத்தைத் தரிசிப்பதாகும். இதை ஒரு முஸ்லிம் வாழ்நாளில் ஒரு முறை நிறைவேற்றுவது கட்டாயக் கடமையாகும்.

எனவே ஒரு முஸ்லிம் ஹஜ் மாதத்தில் மக்காவில் ஹஜ் கிரியைகள் நிறைவேற்றப்படும் இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டும். இது அரபி மாதங்களில் கடைசி மாதமாகும்.

மக்காவுக்கு நுழையு முன், தான் அணிந்திருந்த ஆடைகளை கழற்றிவிட்டு,இஹ்ராமிற்குரிய ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டும். இஹ்ராம் ஆடை என்பது இரு வெண்மையான ஆடைகளுக்குச் சொல்லப்படும். பின்பு க.்.பாவை வலம் வருதல், ஸ.்.பா, மர்வா-வுக்கு இடையே ஓடுதல், அர.்.பாவில் தங்குதல், முஸ்தலி.்.பா வில் இரவு தங்குதல் போன்ற ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஹஜ் முஸ்லிம்கள் அனைவரையும் பூமியில் ஒன்று சேர்ப்பதில் மிகப் பெரியதோர் வணக்கமாகும். இது அவர்களிடையே சகோதரப் பாசம், அன்பு, நலம் நாடுதல் முதலியவற்றை உறுதிப்படுத்துகிறது. ஒரே ஆடை, ஒரே வணக்க முறை. அவர்களில் ஒருவர் மற்றொருவரை விட இறையச்சத்தின் மூலமே அல்லாமல் சிறந்தவராக மாட்டார்.

இறைவனுக்கு மட்டுமே வணக்கம் செய்ய வேண்டும் என பிரகடனப்படுத்தும் மார்க்கம் தான் இஸ்லாம். அதற்குரிய அடையாளம் லாஇலாஹ இல்லல்லாஹ் ஆகும். இதுவே தனது அடியார்களுக்காக அல்லாஹ்

தேர்ந்தெடுத்துக் கொண்ட மார்க்கமாகும். இஸ்லாம் அல்லாததை எவரிடமிருந்தும் மார்க்கமாக ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இதை ஏற்று நற்செயல்கள் செய்பவன் அருள் மிக்க சொர்க்கம் பெற்று, வெற்றி பெற்றவர்களில் இருப்பான் என்று கூறும் மார்க்கம் தான் இந்த இஸ்லாம். இம்மார்க்கம் குறிப்பிட்ட மனிதருக்கோ, குறிப்பிட்ட கூட்டத்தினருக்கோ சொந்தமல்ல. எனவே இம்மார்க் கத்தை ஏற்று அதன் பால் பிறரை அழைப்பவரே மக்களில் மிகச் சிறந்தவர். அவரே அல்லாஹ்விடம் மிகுந்த மரியாதைக்குரியவர்.

மக்களுக்கும் இம்மார்க்கத்திற்குமிடையே திரும்பத் திரும்ப வரக்கூடிய சில முக்கியமான விஷயங்களையும் அவர்கள் இஸ்லாத்தில் நுழைவதைத் தடுக்கக்கூடிய சிலவற்றையும் இந்நூலைப் படிக்கின்ற நன்மக்களுக்கு உணர்த்துவது நமது கடமையாகும்.

1. **அறியாமை:** இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கை, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை அறியாமலிருப்பது. மனிதர்கள் தாம் அறியாதவற்றிற்கு பகைவர்களாவர். எனவே இஸ்லாத்தை அறிய விரும்புபவர் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நேர்மையான சிந்தனையுடன் இஸ்லாத்தின் மூல அடிப்படைகளைப் பல முறைப் படிக்க வேண்டும்.

2. **பிடிவாதம்:** நன்கு சிந்திக்காமால் தனது மக்கள் வளர்ந்து வந்த மார்க்கம், பழக்க வழக்கங்கள், கலாச்சாராம் ஆகியவற்றில் பிடிவாதமாக இருப்பது. தான் வளர்ந்து வந்திருக்கின்ற மார்க்கமே சரியானது என எண்ணுவது, சமூக நடைமுறையைப் பற்றிக் கொள்வது. தனது பெற்றோர், பாட்டன் மார்க்கமல்லாத ஏனைய மார்க்கங்களை விட்டு விடுவது. பிடிவாதம் சத்தியத்தை ஏற்பதை விட்டும் கண்களை மூடிவிடும். காதுகளை அடைத்துவிடும். அது சமயம் மனிதன் சுயமாகவும் நேர்மையாகவும் சிந்திக்க மாட்டான். இருளுக்கும் ஒளிக்குமிடையே வித்தியாசத்தைக் காணமாட்டான்.

3. **மனோ இச்சைகள்:** இவை சிந்தனைகளையும் நோக்கங்களையும் தாம் விரும்புகின்ற இடங்களின் பால் செலுத்தி விடும். சத்தியத்தை ஏற்றுக் கொள்வதையும் அதற்குக் கட்டுப்படுவதையும் பலமாகத் தடுத்துவிடும்.

4. **சில முஸ்லிம்களிடமுள்ள மூடப்பழங்கக்களும் தவறுகளும்:** இவை ஒருவனை தவறச் செய்யவும் தவறானவற்றை இட்டுக்கட்டவும் செய்துவிடுகிறது. ஆனால் இஸ்லாம் இதற்கு அப்பாற்பட்ட மார்க்கமாகும். மனிதன் தவறாகக் கூறுவதைக் கேட்கும் மார்க்கமல்ல அல்லாஹ்வின் மார்க்கம் என எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும்.

சத்தியத்தையும் நேர்வழியையும் அறிந்து கொள்ள மிக எளிய வழி என்னவென்றால் அடியான் நிரந்தரமான, பாக்கியமிக்க அதன் பின் கேடே ஏற்படாத வாழ்வைப் பெற இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் பிரார்த்திப்பவரின் பிரார்த் தனைக்குப் பதிலளிப்பவன் என அறிந்து கொள்ள வேண்டும்.